**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 24.09.2025

**அசல் வழக்கு எண்.184/2010**

**வா.சா.**1 – Charles Babu, S/o.Sebastian

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சர்வே எண் 46/2 ல் மொத்த பரப்பளவு எவ்வளவு என்று உங்களால் சொல்ல முடியுமா என்றால் 1 ஏக்கர் 58 செண்ட் ஆகும். உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 2 ஏக்கர் 58 செண்ட் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஏ ரிஜிஸ்டர் எக்ஸ்ட்ராக்ட் நீதிமன்றத்தில் இருந்தால் எவ்வளவு சரியான பரப்பளவு என்று நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான். அந்த ஏ ரிஜிஸ்டர் எக்ஸ்ட்ராக்ட் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்யவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் அதனை தாக்கல் செய்தால் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படுகின்ற அந்தப் பதிவேடு ஏ ரிஜிஸ்டர் பதிவேடு என்றால் சரிதான். அதில் இரண்டாம் பாகத்தில் 46/2 என்கிற சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2 ஹெக்டேர் 27.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படியானால் அது மொத்தம் 5 ஏக்கர் 62 செண்ட் என்றால் தெரியாது. 1 ஹெக்டேர் என்பது 100 ஏர் ஆகும் அதாவது 1 ஏர் என்பது 2.47 செண்ட். 2 ஹெக்டேர் 27.5 ஏர்ஸ் என்பது 5 ஏக்கர் 62 செண்ட் வரும் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணுக்கு எதிராக செபஸ்டின் நாயுடு என்று உங்களுடைய தந்தை பெயர் இருக்கிறதா என்றால் என் தந்தை பெயர் அங்கே குறிப்பிடவில்லை. கிருஷ்ணன் லீலா, ஜூலியன் ஜோசப் அவரது கணவர், ராஜூ நாயுடு ஆகிய மூன்று பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சர்வே எண்ணில் உங்கள் தந்தைக்கு எந்த நிலமும் கிடையாது என்று சொன்னால் சரி இல்லை. அதே போல் உங்கள் தந்தை பெயரில் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் எதுவும் கிடையாது என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதி கிருஷ்ண லீலா பெயரில் முதலில் 22 ஏர் என்றும் மற்றும் 26 ஏர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆக மொத்தம் 48 ஏர் என்றால் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுதான். சர்வே எண் 46/2B1 இல் 49.5

ஏர் என்றும் சர்வே எண் 46/2B2 ல் 24 ஏர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளதுதான். ஆக மொத்தம் 73.5 ஏர் என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதுதான். ஆகவே மேற்படி இரு நபர்கள் பெயரில் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ண லீலா என்பவர் கடந்த 13/7/1975 ஆம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் வாயிலாக சர்வே நம்பர் 46/2A மற்றும் 46/2C ஆகிய சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தினை கிருஷ்ணலீலா என்பவர் லூதர் நாயுடு என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் தெரியுமா என்றால் லூர்து நாயுடு என்பவரிடமிருந்து வாங்கி உள்ளார் அவர் என் பெரியப்பா அவார். கிருஷ்ணா லீலா மற்றும் ஜூலியன் ஜோசப் ஆகியோர் உரிமையாளர்களாக இருந்து அவர்களுடைய சுவாதீன அனுபவத்தில் வழக்கு சொத்துக்கள் இருந்து வருகிறது என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியின் கணவர் ஜூலியன் ஜோசப் என்பவர் சர்வே நம்பர் 46/2B2 அவருக்கு உரிமையான சொத்தை பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு விற்பனை செய்து உள்ளார் என்றால் சரிதான். ஜூலியன் ஜோசப் என்பவர் இறப்புக்குப் பிறகு அவருக்கு சொந்தமான சர்வே நம்பர் 46/2B1 ல் 49.5 ஏர் நிலம் அவர் மனைவியான கிருஷ்ணலீலா என்பவருக்கு வாரிசுரிமை அடிப்படையில் வந்து சேர்ந்துவிட்டது என்றால் சரி இல்லை. மேற்படி அந்த நிலத்தை தான் முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து உள்ளார் என்றால் சரியில்லை. இரண்டாம் பிரதிவாதி அந்த நிலத்தை சுற்றியுள்ள இதர நிலங்களை கிரயம் பெற்றுள்ளார் அந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது வழக்கு சொத்துக்கான வருவாய் ஆவணங்கள் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை இரண்டாம் பிரதிவாதி பெயரில் இருப்பதாக வழக்கில் நீங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் தந்தைக்கு வழக்கு சொத்து உரிமையானது என்று காட்டுவதற்கு நீங்கள் எந்த ஆவணமும் இதுநாள் வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. வாதிகள் அனைவருக்கும் சொந்தம் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. இந்த வழக்கு வழக்கு சொத்தின் சுவாதீன மீட்புக்காக தாக்கல் செய்துள்ளீர்கள் ஆகவே வழக்கு சொத்தில் சுவாதீனம் உங்களிடம் இல்லை என்பதை நீங்களே ஒப்புக்கொண்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். ஜூலியன் ஜோசப் என்பவர் பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு கிரயம் கொடுத்த 58 சென்ட் நிலம் மட்டும்தான் அவருக்கு சொந்தமானது என்றும் முதல் பிரதிவாதியான கிருஷ்ண

லீலா என்பவர் இரண்டாம் பிரதிவாதிக்கு மறுபடியும் 58 செண்ட் நிலம் கிரையம் கொடுத்ததாக தவறுதலாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் கூறும் கூற்றுப்படி இரண்டு 58 செண்ட் நிலங்களும் வெவ்வேறானவை என்றால் சரிதான். மேற்படி பிலோமினா இருதயராஜ் என்பவர் முனுசாமி என்பவருக்கு ஒரு 58 செண்ட் கிரயம் கொடுத்துள்ளார் அது வில்லங்கச் சான்றில் வருகிறது அது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிருஷ்ண லீலா என்பவருக்கு அவருடைய கணவர் ஜூலியன் ஜோசப் ஏற்கனவே 58 செண்ட் விற்பனை செய்து உள்ளார் அதனால் கிருஷ்ண லீலா என்பவருக்கு எந்த பங்கும் கிடையாது என்று நீங்கள் கூறுகிறீர்களா என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. கிருஷ்ண லீலா என்பவருக்கு வேறு சில சொத்துக்களும் சொந்தமாக இருக்கலாம் என்றால் இருக்கலாம். அந்த இதர நிலங்களை தான் கிருஷ்ண லீலா இரண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து உள்ளார் என்றால் சரியில்லை. உரிமையும் சுவாதீனமும் உங்களிடம் இல்லாத சூழ்நிலையில் வழக்கு சொத்து குறித்து ஆவணங்கள் எழுதப்பட்ட நிலையில் அந்த ஆவணங்கள் ரத்து செய்ய வேண்டும் என்ற பரிகாரம் வழக்கில் கோரி இருக்க வேண்டும் என்றால் சரியில்லை. இனிமேல் அந்த ஆவணத்தை நீங்கள் ரத்து செய்ய கோரி பரிகாரம் கோர முடியாது காலதாமதம் முடிந்து விட்டது என்றால் சரியில்லை. பிரதிவாதிகள் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் ரத்து செய்ய வேண்டும் என்று நீங்கள் பரிகாரம் வரவில்லை ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. இரண்டாம் பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் அவரிடம் இருந்து பணம் பறிக்க இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. உரிமையும் சுவாதீனமும் இரண்டாம் பிரதிவாதியிடம் தான் உள்ளது ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.